தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமம்
TAMIL NADU FOREST UNIFORMED SERVICES RECRUITMENT COMMITTEE
8வது கீழ் தளம், எண்.01 ஜீனிஸ் சாலை, பனகல் மாளிகை, சைதாப்பேட்டை,
சென்னை–600 015.
8th Down Floor, No.01, Jeenis Road, Panagal Maaligai, Saidapet,
Chennai - 600 015.
Phone No. / தொலைபேசி எண். 044-2434 1251
**Website :** www.forests.tn.gov.in

# வனக்காவலர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்புதல்

(விளம்பர எண். 1/2019, நாள்: 07.03.2019 மற்றும் அறிவிக்கை எண்.1)

***

## விண்ணப்பதாரர்களின் கவனத்திற்கு

வனக்காவலர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புதல் குறித்து வெளியிடப்பட்ட அறிவிக்கை – இனம் எண்.18–எச்சரிக்கை பகுதிக்கு விண்ணப்பதாரர்களின் கவனம் கொண்டுவரப்படுகிறது. அவற்றில் பணிநியமனம் பெறுவது தொடர்பாக முறையற்ற வகையில் ஈடுபடுதல் / இதுபோன்ற நடவடிக்கைகளில் இருந்து பாதுகாத்தல் குறித்து எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது.

2) விண்ணப்பதாரர்களின் நலன் கருதி மேற்குறிப்பிட்ட அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள **"எச்சரிக்கை"** பகுதி மீண்டும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**இனம் எண்.18. எச்சரிக்கை**

i) தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து நியமனங்களும் தகுதியின் அடிப்படையில் மட்டுமே நிரப்பப்படும்.

ii) பணிநியமனம் பெற்றுத்தருவது குறித்து மோசடி தரகர் மற்றும் ஏஜண்டுகளின் பொய்யான வாக்குறுதிகளை நம்பி ஏமாற வேண்டாம் என தமிழ்நாடு வனச்சீருடை பணியாளர்கள் தேர்வுக் குழுமம் எச்சரிக்கை செய்கிறது.

iii) மோசடி தரகர் மற்றும் ஏஜெண்டுகளால் மேற்கொள்ளப்பட்ட ஏமாற்றங்களால் ஏற்பட்ட இழப்புகளுக்கு எந்தவிதத்திலும் தமிழ்நாடு வனச்சீருடை பணியாளர்கள் தேர்வுக் குழுமம் பொறுப்பேற்பாகாது.

iv) பணி நியமனம் பெறுவது தொடர்பாக விண்ணப்பதாரர்கள் தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தின் தலைவர் / உறுப்பினர் / உறுப்பினர் செயலர்/ இதரப்பணியாளர்கள் ஆகியோருக்கு நேரடியாகவோ / தபால் மூலமாகவோ /தொலைபேசி மூலமாகவோ/ உறவினர்கள், நண்பர்கள், புரவலர்கள், உயரதிகாரிகள் அல்லது இதர நபர்கள் மூலமாகவோ செல்வாக்கு ஏதேனும் பயன்படுத்தினால் அவர்களது விண்ணப்பம் எவ்வித முகாந்திரமுமின்றி நிராகரிக்கப்படும்.

நாள்: 23.10.2019 உறுப்பினர், தநாவசீபதேகு.